# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம் /புவியியற்துறை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2009/2010 (2014 March)

| | |
|---|---|
| **GEOS 4102:** பிரதேச அபிவிருதிதியும் திட்டமிடலும்<br>(Regional Development & Planning) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- ஒவ்வொரு பகுதிலுமிருந்து இவ்விரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு(04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

### பகுதி -1

(01) a. அபிவிருத்தி, பிரதேசஅபிவிருத்தி என்பதனை வேறுபடுத்துக.

(6 புள்ளிகள்)

b. பிரதேசரீதியான அபிவிருத்திச் சமமின்மை என்பது பல காரணிகளின் ஒரு வெளிப்பாடு ஆகும். இக்கருத்தினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா?. உதாரணங்கள் தந்து விளக்குக.

(19 புள்ளிகள்)

(02) a. வளர்ச்சிமுனைக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவங்கள் யாவை?

(8 புள்ளிகள்)

b. வளர்முக நாடுகளின் பிரதேசங்களைத் திட்டமிட்ட முறையில்அபிவிருத்தி செய்வதற்கு வளர்ச்சிமுனைக்கோட்பாடு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை நாடுகளை உதாரணங் காட்டி விளக்குக.

(17 புள்ளிகள்)

(03) a. மத்திம இடக்கோட்பாடு என்பதால் கருதப்படுவது யாது?

(10 புள்ளிகள்)

b. பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலுக்கு இக்கோட்பாட்டின் பிரயோகத் தன்மையினை இலங்கையை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

(15 புள்ளிகள்)

## பகுதி -11

(04) 'பிரதேசரீதியான அபிவிருத்தி இலக்குகளையே துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம் கொண்டுள்ளது'. இக்கூற்றின் உள்ளடக்கத்தினை விளக்குக.

(25 புள்ளிகள்)

(05) மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பிரதேசத்தின் அபிவிருத்தியின்மைக்கு போக்குவரத்து, சேவைநிலையங்கள் விருத்தியுறாமை பாரிய சவாலாக உள்ளது. இவற்றினை நிவர்த்தி செய்து இப்பிரதேசத்தில் அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கான செயற்திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கான பொறுப்பு உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான செயற்திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

(06) பிரித்தானியாவின் பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலை முன்னெடுப்பதற்குப் பொறுப்பாயமைந்த காரணிகளைக் குறிப்பிட்டு பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்றப்பட்ட உபாயங்கள் பற்றியும் நுணுக்கமாக பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)